# Silambil Ani Nayam

**Dr. E. Kothandaraman**
*Associate Professor & Head, Department of Tamil,*
*Agurchand Manmull Jain College (Shift – II), Meenambakkam, Chennai*

**Abstract**
*Tamil, the mother tongue of the Tamil people, is an ancient classical language. The refined beauty that originated along with Tolkappiyam grammar and Tamil literature is subtle yet profound. From the Sangam age onwards, Tamil literary works have been enriched through the use of various aṇi (poetic embellishments). These aṇi add aesthetic charm and artistic elegance to literary creations. A title functions as the gateway to a literary work. It serves as the primary element that attracts the reader. A well-crafted title has the power to arouse curiosity and guide the reader's mind towards the core theme of the text. It creates a first impression and prepares the reader emotionally and intellectually to enter the literary world of the work. When Aṇi are employed in titles, they enhance beauty, depth, and imaginative appeal. Through devices such as Uvamai Aṇi (simile), Uruvaga Aṇi (metaphor), Tharukkurippēṟṟa Aṇi (personification), and Maṇṇagamandhai, the title itself becomes a poetic expression. Such titles do not merely name the text but elevate it artistically. Therefore, the use of aṇi in titles plays a significant role in increasing the aesthetic value and literary richness of Tamil works. This research paper examines the structure, function, and beauty of aṇi used in titles and analyses their contribution to literary excellence.*

***Keywords:*** *Tolkappiyam – Thandialangaram – Uvamai Aṇi – Uruvaga Aṇi – Tharukkurippēṯra Aṇi – Maṇṇagamadandhai.*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358384

**References**

1. E. Sundaramoorthy, Thirukkural Aninayam, University of Madras, Chennai, 1981.
2. Sangam Literature, Saiva siththantha noorpathipukkazagam, Chennai, 2007.
3. Nanool, Devira urai, Srinandhini Pathippakam, Chennai, 2016.
4. R. Srinivasan, Silappadigaaram moolamum Thiranaivum, Aniyagam, Chennai, 1998.
5. Kumarasamipulavar Urai, Dhandiyalangaram, International Institute of Tamil Studies, Chennai, 2009.
6. Puliyoor Kesigan Urai, Puraporul Venba Malai, Sarada Pathippagam, Chennai, 2009.

# சிலம்பில் அணி நயம்

***முனைவர் ஏ. கோதண்டராமன்***
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தமிழ்த்துறை
அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி (சுழல் - 2), மீனம்பாக்கம், சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ் மொழியில் தோன்றிய முதல் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். சிலப்பதிகாரம் தோன்றுவதற்கு முன்னிருந்த தமிழிலக்கியம் அகத்திணை, புறத்திணை பாடல்களாக அமைந்து தனிமனித உணர்ச்சிகளை உணர்த்தின. ஒருவரது வாழ்க்கையை முழுமையாகப் பார்த்து, உயர்ந்த உண்மைகளைக் காட்டி, மனித சமுதாயத்தைவழிநடத்திச்செல்லும் இலக்கியமாகச்சிலப்பதிகாரம்விளங்குகிறது. காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்து, குலவொழுக்கப்படி திருமணம் செய்து, இல்லறம் நடத்திய கோவலன் கண்ணகி வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூலாக அமைகிறது.*
***கருச்சொற்கள்:*** *தொல்காப்பியம், தண்டியலங்காரம், உவமையணி, உருவக அணி, தற்குறிப்பேற்றவணி, மண்ணகமடந்தை.*

**முன்னுரை**

இலக்கியங்கள் மனித வாழ்க்கையைப் பிரதிபலிப்பன. மனிதர்களின் வாழ்க்கை இலக்கியங்களில் பதிவுசெய்யப் பெறுகின்றது. படிக்கும் வாசகரால் பயன் கொள்ளக்கூடியதாகிறது. தமிழில் தோன்றிய முதல் காப்பியம் இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரம். இது இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ்க் காப்பியமாகத் திகழ்வது. மூவேந்தர்களையும் கதைத் தொடர்பால் ஒருங்கிணைப்பது. சமண, பௌத்த, வைதீக சமயங்களைப் பத்தினி வழிபாட்டில் இணைத்துச் சமய ஒற்றுமை பேணுவது. புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் எனச் சோழ, பாண்டிய, சேர நாட்டுத் தலைநகரங்களையே காண்டத் தலைப்பாகக் கொண்டு தமிழ்த்தேசியம் காண்பதாக அமைந்துள்ளது.

இக்காப்பியம் மன்னரைப் பாட்டுடைத் தலைவராகக் கொள்ளாது, வணிக மகளையும் கணிகை மகளையும் முதன்மைப் பாத்திரங்களாகக் கொண்டது. மொழியாலும், பொருளாலும், இலக்கிய நயத்தாலும், இன்சுவையாலும் முதன்மை பெறும் காப்பியம் இது. பல்வேறு வகையான சிந்தனை மரபுகளையும் பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் உள்ளடக்கி இருப்பது. விரிந்த களப்பின்னணியும் காலப்பின்னணியும் கொண்டது. பல்வேறு இன மக்கட்பிரிவினர் பற்றிப் பேசுவது. சமூக, சமய, அரசியல் சிந்தனைகளின் களஞ்சியமாகத் திகழ்வது. எல்லாவற்றிற்கும் மேலாக, உலக இலக்கிய வரலாற்றில் பெண்மைக்கு முதன்மை தருகின்ற ஓர் உன்னதக் காப்பியமாகத் திகழ்வது சிலப்பதிகாரம்.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் பாட்டிடையிட்ட தொடர் நிலைச்செய்யுள் எனவும் வழங்கப்படுகிறது. இக்காப்பியம் இயல், இசை, நாடகம் என்ற மூன்றனையும் கொண்டு கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. கோவலன் என்ற குடிமகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டதால் இதனைக் குடிமக்கள் காப்பியம் என்றும் அழைப்பர்.

ஒருவரது வாழ்க்கையை முழுமையாகப் பார்த்து உயர்ந்த உண்மைகளை எடுத்துரைத்து, மனித சமுதாயத்தை வழி நடத்திச் செல்லும் பெருங்காப்பியமாக இக்காப்பியம் அமைகிறது.

இவ்வுலக மக்கள் அறிந்து பயன் பெறும் வகையில்,

**அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவது**
**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவது**
**ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்**

என்ற மூன்று உண்மைகளைக் கருப்பொருளாகக் கொண்டு இவை நூல் முழுமையும் விரவி வந்துள்ளதைக் காணலாம். சிலப்பதிகாரக் காப்பியத்தின் பெருமையைப் பாரதியார்,

**நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்**

எனப் பாராட்டியுள்ளார். இத்தகு சிறப்புப் பெற்ற இக்காப்பியத்தில் அணிநயம் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## தொல்காப்பியரும் அணி இலக்கணமும்

தமிழில் கிடைத்துள்ள முழுமையான தொன்மையான இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் எனும் மூவகைப் பகுப்புகளை உடையது. தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் யாப்பினையும், அணியினையும் கூறியுள்ளார். தொல்காப்பியர் அணி இலக்கணம் என்று கூறாது, உவமவியல் என்று கூறி, உவமவியலுள் தமது முன்னோர் கொள்கைகளை ஏற்று, அணிகளைப் பல வகையாகப் பாகுபாடு செய்யாது அணிகளுக்கு அடிப்படையான உவமை ஒன்றனை மட்டுமே விளக்கியுள்ளார்.

தொல்காப்பியத்துள் ஒரே அணியாக இருந்த உவமை, காலப்போக்கில் பல அணிகளாக மாற்றம் பெற்றது. இதனை,

கி. பி. பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய திவாகரம் இருபத்தெட்டு அணிகளையும், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய தண்டியலங்காரம் முப்பத்தைந்து அணிகளையும், கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய மாறன் அலங்காரம் அறுபத்து நான்கு அணிகளையும், சந்திராலோகம் நூறு அணிகளையும், அணியிலக்கணம் எனும் நூல் நூற்றிரண்டு அணிகளையும், குவலயானந்தம் நூற்றிருபது அணிகளையும், முத்துவீரியம் ஐம்பத்தெட்டணிகளையும், சுவாமிநாதம் முப்பத்தியொரு அணிகளையும் கூறுகின்றன.[1] என

ந. சி. கந்தையாபிள்ளை கூற்று மூலம் அறியலாம்.

## தண்டியலங்காரமும் அணி இலக்கணமும்

கி.பி. 11ஆம் நூற்றாண்டில் எழுந்த இந்நூல் நூற்றியிருப்பத்தாறு நூற்பாக்களைக் கொண்டுள்ளது. பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்ற மூன்று இயல்களை உடையது. பொதுவணியியலில் செய்யுட்களின் பகுப்பும் வைதருப்பநெறி கௌட நெறியார்களுக்கு உரிய பத்துக் குணங்களின் விளக்கமும் குறிப்பிடப்பட்டுள்ளன. பொருளணியியலில் தன்மை முதலாகப் பாவிகம் ஈறாக முப்பத்தைந்து அணிகள் விளக்கப்பட்டுள்ளன. சொல்லணியியலில் மடக்கின் வகைகளும், கோமூத்திரி முதல் அக்கரச்சுதகம் ஈறாகப் பன்னிரண்டு சித்தரகவிகளும் நிரோட்டகம் முதலிய எட்டும், பிரிபொருள் சொற்றொடர் முதலிய ஒன்பது வழுக்களும் அவற்றின் அமைதியும் இடமலைவு முதலிய அறுவகை மலைவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அணியிலக்கணங்களைப் பற்றிய விரிவான இலக்கணங்களைக் கூறும் தொல்காப்பியம் முதலாகக் குவலயானந்தம் ஈறாகச் சொல்லப்பட்ட நூல்களுள்,

தண்டியலங்காரமே தமிழ் மக்களிடை பயிற்சி மிக்குடையதாய் விளங்குகின்றது.[2] என இ. சுந்தரமூர்த்தி குறிப்பிடுகின்றார்.

## அணி – விளக்கம்

செய்யுளில் அமைந்து கிடக்கும் அழகினைப் புலவர்கள் அணி என்னும் பெயரால் குறித்தனர். உடலையும் உருவத்தையும் அழகுப்படுத்துவது போலவே சொல்லை அழகுபடுத்துவதற்கு அணி, அலங்காரம் என்ற பெயர்கள் தோன்றின. நன்னூலார்,

**பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போல்பல**
**சொல்லால் பொருட்கு இடனாக உணர்வினின்**

**வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்**[3]

என்கிறார். பொருளானும் சொல்லானும் புனையப்படும் செய்யுட்கு அழகு பொருந்தப் புணர்த்தலின் அணியாயிற்று என்பதை,

**பொருளினும் சொல்லினும் புனையுறு செய்யுட்கு**
**அணியுறப் புணர்த்தலின் அணியெனும் பெயர்த்தே**[4]

என மாறனலங்காரம் குறிப்பிடுகின்றது.

கலைஞர் தம் உணர்ச்சியையும் கற்பனையையும் உணர்த்துதல் போல் தம் கலைத்திறனை வெளிப்படையாகக் காட்டுதல் இல்லை. கலைத்திறனை மறைத்துக் கலைப்பயனை மட்டும் நல்குவர். ஆயின் ஆராய்ச்சியாளரோ மறைந்துள்ள கலைத்திறனை ஆராய்ந்து காணுதலையே கடமையாகக் கொள்வர். அவ்வாறு ஆராயும்போது காணப்பட்ட சிலவகைத் திறங்கள் அவர்களின் ஆராய்ச்சிக்கு எட்டாமல் நின்றபோதிலும் அவற்றிற்குப் பெயரும் இலக்கணமும் வகுக்க முயன்றனர். இந்த முயற்சியின் பயனாக ஏற்பட்டதே அணியிலக்கணம்[5] என்று அணியிலக்கணத்தின் தோற்றம் பற்றி மு. வரதராசன் குறிப்பிடுவார்.

### மண்ணக மடந்தை

மண்ணகமாகிய மடந்தை கடலாகிய ஆடையும் மலையாகிய முலையும் பெரிய ஆறாகிய மார்பு மாலையும் முகிலாகிய கூந்தலும் கொண்டவள். அந்நில மகளின் உடலை மறைத்த இருளாகிய போர்வையைக் கதிர் கைகளால் நீக்கி உதயகிரியின் உச்சியில் தோன்றி உலகம் விளங்கக் காரணமாகிய சூரியன் தன் கதிர்களைப் பரப்புகின்றான். இதனை,

**அலைநீர் ஆடை மலைமுலை ஆகத்து**
**ஆரப் பேரியாற்று மாரிக் கூந்தல்**
**கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை**
**புதையிருள் படாஅம் போக நீக்கி**
**உதய மால்வரை உச்சித் தோன்றி**
**உலகு விளங்கு அவிரொளி மலர்கதிர் பரப்பி"**
**(சிலம்பு.:1-6)**

என்ற இயற்கை வருணனையில் நிலத்தை மடந்தையாக உருவகித்துப் போற்றியுள்ளதை அறியலாம்.

**மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை**
**அணிமுலைத் துயல் வரூஉம் ஆரம் போல**[6]

என்னும் அடிகள், நில மடந்தையின் கொங்கை மீது அசைகின்ற முத்து மாலையைப் போல, மலையின் மீதிருந்து கொட்டும் காட்டாற்று வெள்ளம் காட்சியளித்தது என்பதை விளக்குவதாக அமைகிறது. இப்பாடல் அடிகளிலும் நிலத்தைப் பெண்ணாக உருவகம் செய்திருப்பதை அறியலாம்.

சூரியன் கடலிலே மறைந்துவிட்டான். நிலமகள் தன் தலைவனைக் காணாது வருந்துகிறாள். நிலவுக்கதிர்களை விரித்து ஒளி செய்யும் என் செல்வன் சந்திரனும் இன்னும் தோன்றவில்லை என்று நிலமடந்தை புலம்புவதை,

**விரிகதிர் பரப்பி உலகமுழு தாண்ட**
**ஒருதனித் திகிரி உரவோற் காணேன்**
**அங்கண் வானத்து அணிநிலா விரிக்கும்**
**திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல்லெனத்**
**திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்**
**முழுநீர் வார முழுமெயும் பனித்துத்**
**திரைநீர் ஆடை இருநில மடந்தை**
**அரைசுகெடுத்து அலம்வரும் அல்லற் காலை"**
**(சிலம்பு. 4:1-8)**

என்னும் அடிகள் புலப்படுத்தும். இதில் நிலம் மடந்தையாகவும் சூரியன் தலைவனாகவும் திங்கள் செல்வனாகவும் திசைகள் முகமாகவும் மலர்கள் கண்களாகவும் உருவகிக்கப்படுகின்றன.

நிலமகளின் துயரத்தைக் கூறுவதாக வருணனை செய்வதன் மூலம் கண்ணகியின் பிரிவாற்றாத் துயரத்தைப் புலவர் காட்சிபடுத்துகிறார். நிலமகளைக் காணும் நம் உள்ளம் கண்ணகியின் பசலையுற்ற முகத்தினையும் நீர் வழியும் மலர்க் கண்களையும் துயரத்தால் நடுங்கும் உடலையும் புலவருடைய கற்பனை திறத்தால் உணரலாம்.

### பொய்யாக் குலக்கொடி

இயல்பாக நடக்கும் ஒரு நிகழ்வின் மீது கவிஞர் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப் பேற்ற அணி ஆகும். இதனை,

**இயல்பின் விளைதிற னன்றி அயலொன்று**
**தான்குறித் தேற்றுதல் தற்குறிப் பேற்றம்**[7]

என்கிறது தண்டியலங்காரம். இவ்வணியை

மதுரையில் உள்ள வையையாறு, அகழிமலர்கள், மதிலின் மேல் பறக்கும் கொடி ஆகியவற்றின் மீது இளங்கோவடிகள் ஏற்றி உரைப்பதை அறியலாம்.

வையை என்னும் பெண், கண்ணகிக்கு வரப்போகும் துன்பத்தை முன்னமே அறிந்தவள் போல், மலராடையால் தன்னைப் போர்த்திக் கொண்டு தன் கண்ணீரைக் கண்ணகி காணாதவாறு மறைத்துக் கொண்டாளாம். இதனை,

***வையை என்னும் பொய்யாக் குலக்கொடி***
***தையற்கு உறுவது தான் அறிந்தனள் போல்***
***புண்ணிய நறுமல ராடைப் போர்த்துக்***
***கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கி***

***(சிலம்பு. 13: 170 – 173)***

என்னும் அடிகள் குறிப்பிடும். ஆற்றுநீர் மேலே அளவற்ற மலர்கள் அடித்துக் கொண்டு வருவதால் நீர் இருப்பதே தெரியவில்லை. ஆதலின் மலராடை போர்த்திக் கொண்டது போல் தெரிகிறதாம்.

வையை ஆற்றை இப்படி கற்பனை செய்த இளங்கோவடிகள், மதுரை மாநகர் அகழிப் பகுதியில் உள்ள குவளையும் ஆம்பலும் தாமரையும் கண்ணகியும் கோவலனும் துன்பமுறப்போகிறார்கள் என்பதை ஐயமின்றி முன்கூட்டி அறிந்தன போல், வண்டுகளின் ஒலியே தன் அழுகையாகத் தேன் சிந்துதல் கண்ணீர் வடித்தலாகக் காற்றில் அசைதல் நடுங்குதலாகக் கற்பனை செய்கின்றார். இதனை,

***கருநெடுங் குவளையும் ஆம்பலும் கமலமும்***
***தையலும் கணவனும் தனித்துறு துயரம்***
***ஐயமின்றி அறிந்தன போலப்***
***பன்னீர் வண்டு பரிந்தினைந்து ஏங்கிக்***
***கண்ணீர் கொண்டு காலுற நடுங்க***

***(சிலம்பு. 13: 184–188)***

என்னும் அடிகள் தெளிவுப்படுத்தும்.

அன்பு, இரக்கம் முதலிய மானிடப் பண்புகளை இயற்கையில் அமைத்து பாடியிருப்பதன் மூலம் இளங்கோவடிகளின் கற்பனை திறத்தையும் அருள் உள்ளத்தையும் அறிய முடிகிறது.

### கொடுங்கோலரசன்

உறந்தையிலிருந்து மதுரைக்குச் செல்லும் கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளாரும் வெயிலின் வெப்பம் வாட்டுவதால் வழிநடை வருத்தம் தீர ஐயை கோட்டம் புகுந்து அங்கு நிகழ்ந்த வேட்டுவ வரிக்கூத்தைக் கண்ணுற்று பாண்டிய மன்னனின் அருளாட்சி நிகழும் அந்த நாட்டிலே இரவில் செல்லும் வழிப்போக்கர்க்குத் துன்பம் சிறிதும் உண்டாகாது என்று அறிந்து நிலவு தோன்றும் பொழுதை எதிர்பார்த்திருந்தனர் என்பதை இளங்கோவடிகள் அழகிய உவமை மூலம் விளக்குவதை அறியலாம். இதனை,

**கொடுங்கோல் வேந்தன் குடிகள் போலப்**
**படுங்கதிர் அமையம் பார்த்திருந் தோர்க்குப்**
**பல்மீன் தானையொடு பாற்கதிர் பரப்பித்**
**தென்னவன் குலமுதற் செல்வன் தோன்றி''**

***(சிலம்பு. 13: 15–18)***

என்னும் அடிகள் புலப்படுத்தும். கொடுங்கோண்மையுடைய அரசனின் குடிகள் அவன் மறையும் காலத்தை நோக்கியிருப்பது போல கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் மூவரும் சூரியன் மறையும் நேரத்தை எதிர் பார்த்திருந்தமையினை இளங்கோவடிகள் அரசனோடு இயைபுபடுத்தி வருணிக்கின்றார்.

சூரியனைச் செங்கோலோடு அரசாளும் அரசனோடும் மாலைப்பொழுதைக் கொடுங்கோலோடு அரசாளும் குறுநில மன்னனோடும் ஒப்பிடும் காட்சியை,

***எல்லுறு தெறுகதிர் மடங்கித்தன் கதிர்மாய***
***நல்லற நெறிநிறீஇ உலகாண்ட அரசன்பின்***
***அல்லது மலைந்திருந்து அறநெறி நிறுக்கல்லா***
***மெல்லியான் பருவம்போல் மயங்கிருள் தலைவர***
***எல்லைக்கு வரம்பாய இடும்பைகூர் மருள்மாலை[8]***

எனக் கலித்தொகை பாடல் விளக்குவதைக் காணலாம்.

### பகைப்புல அழிவு

வெற்றிபெற்ற அரசன் பகைவரது மதிலை அழித்துக் கழுதையை ஏராகப் பூட்டி வெள்வரகை விதையாக விதைத்தல் பற்றி,

**எண்ணார் பல்லெயில் கழுதையேர் உழுவித்து**
**உண்ணா வரகொடு கொள்வித் தின்று"[9]**

எனப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகின்றது.

சிலப்பதிகாரத்தில் சேரவேந்தன் செங்குட்டுவனின் பிறந்தநாள் விழாப் பற்றிய குறிப்பு விரிவாகப் பேசப்படுகின்றது. கண்ணகிக்குச் சிலை வடிக்கக் கல் கொணர வடநாடு சென்ற செங்குட்டுவன் தன் பிறந்த நாள் நெருங்குகின்றதனை அறிந்து விரைந்து தன் வஞ்சி மூதூர் திரும்பி வருகின்றான். இந்தச் செய்தியைச் சொல்ல வரும் இளங்கோவடிகள் இவ்விடத்தில் பகைவர் மதிலிடம் வயலாகவும், உண்ணாவரகு விதையாகவும் கழுதை எருதாகவும் சேரன் உழவனாகவும் உருவகிக்கின்ற மரபினை அறியலாம். இதனை,

**வடதிசை மன்னர் மன்னெயில் முருக்கிக்**
**கவடி வித்திய கழுதையேர் உழவன்**
**குடவர் கோமான்"**

**(சிலம்பு. 22: 225 - 227)**

என்னும் அடிகள் விளக்குவதைக் காணலாம்.

**வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி**
**வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்**
**வைகல் உழல[10]**

என்ற புறநானூற்றுப் பாடலும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

## முடிவுரை

தமிழ் இலக்கியங்களில் இயற்கை வருணனைகள் தனித்துப் புனையப்படுவதில்லை. இயற்கையைக் கவிஞன் தான் கூற வந்த பொருளோடு இணைத்து புனையும்பொழுது அவ்விலக்கியம் சிறப்புறுகிறது. இயற்கையோடு இயைந்த வாழ்க்கையையே தமிழ் இலக்கியங்கள் சுட்டுகின்றன.

அன்பு, இரக்கம் முதலிய மானிடப் பண்புகளை இயற்கையில் அமைத்து உவமைப்படுத்தி இருப்பதன் மூலம் இளங்கோவடிகளின் கற்பனை திறத்தை அறியமுடிகிறது.

உவமைக்கு அடுத்த நிலையில் அதன் வளர்ச்சியான உருவகம், தற்குறிப்பேற்றம் முதலிய அணிகளைக் காப்பியத்தில் பரவலாகப் பயன்படுத்திருப்பதை அறிய முடிகிறது.

## சான்றெண் விளக்கம்

1. ந. சி. கந்தையா பிள்ளை, தமிழ் இலக்கிய அகராதி, ப. 94
2. திருக்குறள் அணிநலம், ப. 15
3. நன்னூல், நூ. எண். 268,
4. மாறனலங்காரம், 86
5. மு. வரதராசன், இலக்கியத்திறன், ப. 231
6. சிறுபாணாற்றுப்படை, 1-2
7. தண்டியலங்காரம், பொருளணியியல், 55
8. கலித்தொகை, பா.எண். 129: 3 - 7
9. ஐயனாரிதனார், பு. வெ . மா. 6/26
10. புறம். பா. எண். 392: 9 - 11

## துணைநூற்பட்டியல்


1. இ. சுந்தரமூர்த்தி, திருக்குறள் அணிநலம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1981.
2. சங்க இலக்கியம் (முழுமையும்), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2007.
3. நன்னூல், தேவிரா உரை, ஸ்ரீநந்தினி பதிப்பகம், சென்னை, 2016
4. ரா. சீனிவாசன், சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும், அணியகம், சென்னை, 1998.
5. குமாரசாமிப் புலவர் (உ. ஆ), தண்டியலங்காரம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2015.
6. புலியூர்க் கேசிகன் (உ. ஆ), புறப்பொருள் வெண்பா மாலை, சாரதா பதிப்பகம், சென்னை, 2009.